பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 30 புதன்கிழமை 12.02.2025 கதிர் 096

### இனி இது ரகசியம் அல்ல!

அமெரிக்க அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றதும் அமெரிக்க உதவி (யுஎஸ் எய்ட்) என்ற தனது பன்னாட்டு உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்த ☞2

## தையிட்டியில் இரவிரவாக தொடர்கின்றது போராட்டம்

யாழ்ப்பாணம், தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி நேற்று மாலை தொடங்கிய போராட்டம் இரவிரவாகக் தொடர்கின்றது. இன்று மாலை 4 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை ஆக்கிரமித்து அடாத்தாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரியும், மக்களின் காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் நேற்று மாலை 4 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கட்சி பேதங்களைக் கடந்து பலர் போராட்டத்தில் கலந்துகொண்டனர். போராட்டத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெருமளவிலான பொலிஸாரும் குவிக்கப்பட்டு விகாரைக்கான பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

இதற்கிடையே, தையிட்டி விகாரை ☞2

## 12 சீனர்களை உடன் நாடு கடத்த உத்தரவு

சுற்றுலாப் பயணிகளாக வந்து விசா இல்லாமல் நாட்டில் தங்கியிருந்த பன்னிரண்டு சீன நாட்டவர்களையும் ஒரு வியட்நாமிய நாட்டவரையும் உடனடியாக நாடு கடத்த கொழும்பு கூடுதல் ☞2

### ஆட்சியாளர்களுக்கு

## குரங்குகள் மீது ஏன் இவ்வளவு வெறுப்பு?

### கேட்கிறார் நாமல்



தேங்காய் தட்டுப்பாட்டுக்கும், மின் விநியோக துண்டிப்புக்கும் குரங்குகள் மீது ஆளும்தரப்பு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறது. குரங்குகள் மீது இவர்களுக்கு ஏன் இந்தளவுக்கு வெறுப்பு என்பது தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் நேற்று ☞2

### வாக்குறுதியளித்தபடி

# வற் வரியை உடன் குறைக்க வேண்டும்

### மக்கள் பேரவைக்கான இயக்கம் வலியுறுத்து

**பெறுமதி சேர் (வற்) வரி காரணமாகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிப்பதை இனி மக்களால், குறிப்பாக உழைக்கும் மக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் ஈட்டும் வருமானத்தில் வாழமுடியாதநிலைஏற்பட்டுள்ளது. அதனால் வற் வரியைக் குறைப்பதுடன் பாடசாலை உபகரணங்கள் மீதான வற் வரியை முற்றாக நீக்க வேண்டும் என்று மக்கள் பேரவைக்கான இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

**இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள செய்திக்** ☞2

## இன்று இல்லை மின்வெட்டு

இன்று மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. பௌர்ணமியை முன்னிட்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட திடீர் மின்வெட்டுக் காரணமாக ☞8

## மின்வெட்டுக்கு எப்போது முடிவு? அமைச்சரிடம் பதிலேதும் இல்லை

மின்வெட்டு எப்போது முடிவுக்கு வரும் என்பது குறித்து உறுதியாகக் கூற முடியாது என்று அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் ☞2

## நட்டத்தை மதிப்பிட நடவடிக்கை

ஞாயிறன்று இலங்கை முழுவதும் 6 மணி நேரம் நீடித்த மின் தடையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை முன்னெடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சக்தி அமைச்சும், இலங்கை ☞8



## நாணய நிதியப் பணிப்பாளர் பிரதமர் ஹரினியுடன் பேச்சு

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி சுப்ரமணியன், பிரதமர் கலாநிதி ஹரிணியைப் பிரதமர் அலுவலகத்தில் நேற்று மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் வரிக் கொள்கை, வரி வருவாயை திறம்பட நிர்வகித்தல் மற்றும் பொதுத்துறை செயல்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய பொருளாதார விடயங்கள் குறித்து இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார உறுதிப்பாடு மற்றும் நிலையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான கொள்கை முயற்சிகளை வலியுறுத்தி, ஆளும்தரப்பின் எதிர்கால வளர்ச்சி, ☞2

## போதைக்கு அடிமையான 17 பொலிஸார் பதவி நீக்கம்

### 4 மாதங்களில் நடந்த சம்பவங்கள்

போதைப்பொருளுக்கு அடிமையான 17 பொலிஸார் கடந்த 4 மாதங்களில் மட்டும் நிரந்தரமாகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ☞8

## பாக். பிரதமருடன் ஜனாதிபதி பேச்சு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்றது.

இலங்கை அரசியலில் ஆளும்தரப்புப் ☞2

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 139 பேருக்கு ஒரே நாளில் இடமாற்றம்

பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளான 139 பேர் நேற்று ஒரே நாளில் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இலங்கை பொலிஸ் வரலாற்றில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படுவது இதுவே முதல் முறை என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

.இடம்மாற்றப்பட்டவர்களில் 105 தலைமைகாவல்ஆய்வாளர்களும் 34 காவல் ஆய்வாளர்களும் அடங்குவர்.

## பரந்தன் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

பரந்தன் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 10 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் பக்கம் நடந்து சென்ற ஒருவரை அதே திசையில் வந்த தனியார் ☞8

## "குரங்குச் சேட்டை வேண்டாம்" மரிக்கார் எம்.பி. நேற்று கருத்து

ஞாயிறன்று ஏற்பட்ட மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் மீது பழி சுமத்தினார். 33,000 மெகாவோல்ட் கொண்ட மின் பிறப்பாக்கி விடுதலைப் புலிகளால் தீ வைக்கப்பட்ட போது கூட இவ்வாறு தேசியளவில் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? குரங்கின் மீது பழி சுமத்தி குரங்கு சேட்டைகள் காண்பிக்கவேண்டாம். அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்றவும் முற்படவேண்டாம் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் மரிக்கார் தெரிவித்தார்.

அவர் நேற்று கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஞாயிறன்று ஏற்பட்ட மின்தடைக்கு மின்சக்தி அமைச்சர் குரங்குகள் ☞2

## இனி இது .....

எல்லாத்திட்டங்களையும் இடைநிறுத்தினார். இந்தத் திட்டம் நாடுகளின் உள்நாட்டு அரசியலுக்குள் தேவையற்றதலையீடுகளைச் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டன என்ற அவர் நம்புவதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தத் தடை உத்தரவால், இலங்கையில் அமெரிக்க உதவியில் செயற்படுத்தப்பட்ட பல திட்டங்களும் நிறுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து இலங்கையில் யுஎஸ் எய்ட் என்ன செய்தது என்கிற விடயம் பெரும் பேசுபொருளாகியுள்ளது. அதிலும் குறிப்பாக ராஜபக்சகுடும்பத்துக்கு எதிரான அரசியலுக்கு அமெரிக்க உதவி நிதி பயன்படுத்தப்பட்டதாக நம்புகின்றது.

இப்போது அடுத்த கட்டமாக, அமெரிக்க நிதி பெற்ற அரசியல்வாதிகள் பலரும் இருக்கின்றார்கள் என்று ஒரு 'லிட்ஸ்' சமூக ஊடகங்களில் பரவத் தொடங்கி இருக்கின்றது. ஆளும்தரப்புக்கு எதிரான செயற்பாடுகளுக்காக இந்த நிதி அவர்களுக்கு வழங்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் கருத்துக்கள் பகிரப்பட்டாலும் அதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது என்று சொல்ல முடியாது. ஆனால், அமெரிக்க உதவியில் பெருமளவு நிதி அரசசார்பற்ற ஊடகங்களுக்கும், குறிப்பாக சமூக ஊடகங்களின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது உண்மை. இதனை மட்டும் வைத்துக்கொண்டு, ஆளும்தரப்புக்கு எதிரான சதியில் அமெரிக்க உதவி நிதி பயன்படுத்தப்பட்டது என்று சொல்லிவிட முடியாது. ஆனால், தோற்கடிக்கப்பட்ட அரசியல்வாதிகள் அமெரிக்காவால்தான் தாம் வீழ்த்தப்பட்டோம் என்று மக்களை நம்ப வைத்து அதன் மூலம் மீண்டும் அதிகாரத்திற்கு வருவதற்கு முயற்சிக்கின்றனர். அது பயன்தருமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

நேற்று ஒரு செய்தியாளர் கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, அரசியல்வாதிகளுக்கு கூடுதலாக, ஏராளமான அரசு சாரா நிறுவனங்கள் (NGOக்கள்) மற்றும் ஊடக நிறுவனங்களும் அமெரிக்க உதவி நிதி கிடைத்ததாகக் குற்றஞ்சாட்டினார்.

இப்படி அமெரிக்க நிதி பெற்ற பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத அரசு சாரா நிறுவனங்கள் குறித்து விசாரிக்க ஒரு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்கவேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

சில அரசு சாரா நிறுவனங்கள் முறையான பதிவு இல்லாமல் செயல்படுவதாகவும், வெளியிடப்படாத வெளிநாட்டு நிதியைப் பெறுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார் அவர். எனவே அது பற்றி விசாரிக்க ஒரு குழுவை நிறுவுவது குறித்து முறையாக முன்மொழிந்து சபாநாயகரிடம் அவர் ஒரு கடிதத்தையும் நேற்றுச் சமர்ப்பித்தார்.

இந்த அமைப்புகளில் பல போருக்குப் பிந்தைய மீள்குடியேற்றம் மற்றும் வறுமை ஒழிப்பில் ஈடுபட்டுள்ளதாகக் கூறினாலும், அவற்றின் நிதி ஆதாரங்கள் மற்றும் உண்மையான நடவடிக்கைகள் தெளிவாக இல்லை என்று நாமல் கூறுகின்றார்.

'அமெரிக்க அரசு வெளிப்படையாக சந்தேகங்களை எழுப்பியுள்ள நிலையில், இலங்கை இந்த எச்சரிக்கைகளுக்கு செவிசாய்த்து, நாட்டின் நன்மைக்காகவும், உறுதிப்பாட்டுக்காவும் விசாரணை நடத்த வேண்டும்,' என்று அவர் மேலும் கூறினார்.

சமூக ஊடகங்களின் பரப்புரை வழியாகத்தான் தேசிய மக்கள் சக்தியும் ஆட்சியைப் பிடித்தது. அப்படிப் பார்த்தால் ஆட்சி மாற்றத்திற்கு மட்டுமல்ல அமெரிக்காவுக்கு விருப்பமில்லாத இடதுசாரி பக்கச்சார்பான ஆட்சியாளர்கள் இலங்கையில் அதிகாரத்திற்கு வருவதற்கும் கூட அமெரிக்காதான் காரணம் என்றாகிவிடும். இது ஒரு நகைமுரண்தான்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வற் வரியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முன்னைய ரணில் விக்கிரமசிங்க ஆளும்தரப்பு 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் பெறுமதி சேர் வரி வீதத்தை 15% இலிருந்து 18% ஆக உயர்த்தியது. இதனால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவான அதனத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் வரிகளும் மக்களால் தாங்கமுடியாத அறவிற்கு உயர்ந்தன. குறிப்பாக மருந்துகள், அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களின் விலைகள் பொது மக்களைக் கடுமையாகப் பாதித்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் வற்புறுத்தலின் அடிப்படையில் இந்த வழியில் அரச வருவாயை உயர்த்துவதற்காக அதன் சுமையைப் பொது மக்கள் மீது சுமத்துவது அநியாயமான செயற்பாடாகும்.

தற்போதைய ஆளும்தரப்பு ஆட்சிக்கு வருவதற்கு முன், தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மறுபரிசீலனை செய்து மக்களுக்கு வரிச்சலுகை வழங்குவதாகக் குறிப்பிட்ட வாக்குறுதிகள் இருந்தன. ஆனால், நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அவ்வாறே நடைமுறைப்படுத்த இந்த ஆளும்தரப்பும் செயற்பட்டு வருகின்மையே தற்போதைய நிதர்சமானதாகும்.

பெறுமதி சேர் (வற்) வரி காரணமாகப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிப்பது இனி மக்களுக்கு, குறிப்பாக உழைக்கும் மக்களுக்குச் சகித்துக்கொள்ள முடியாதது. அவர்கள் ஈட்டும் வருமானத்தில் வாழ முடியாத நிதை ஏற்பட்டுள்ளது.

அதன்படி, தேர்தலுக்கு முன்னர் தேசிய மக்கள்சக்தி வாக்குறுதியளித்தபடி, வற் வரியை கணிசமாகக் குறைக்கவேண்டும் என்றும் மருந்துகள், அத்தியாவசிய உணவு மற்றும் பாடசாலை புத்தகங்கள், உபகரணங்கள் மீதான வற் வரி முற்றிலுமாக அகற்ற விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகிறோம்.

## குரங்குகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சாரத்துறை அமைச்சரின் பொறுப்பற்ற கூற்று ஆளும்தரப்பின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் மக்கள் மத்தியில் பொய்யுரைத்ததைப் போன்று தற்போது பொய்யுரைக்காமல் ஆளும்தரப்பு பொறுப்புடன் செயற்படவேண்டும்.

கடந்த ஆளும்தரப்புகளின் நிர்வாகத்தை விமர்சித்தே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. ஆகவே இப்போதும் கடந்த காலத்தை போன்று போலியான குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்காமல் சிறந்த முறையில் செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அமோக வெற்றிப் பெறுவோம். தொகுதி மற்றும் ஆசன மட்டத்தில் தேர்தல் பிரச்சார கூட்டங்களை எதிர்வரும் மாதம் முதல் நடத்துவோம். அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை கிராமத்துக்கு கிராமம் எடுத்துரைப்போம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உத்தியோகபூர்வ அரச இல்லத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்று சிவில் அமைப்பினர் குறிப்பிட வேண்டியதில்லை. வீட்டுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட வேண்டிய தேவையுமில்லை. வீட்டை விட்டு வெளியேறுமாறு ஆளும்தரப்பு சட்டத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வமாக கடிதம் அனுப்பினால் மஹிந்த ராஜபக்ச வீட்டை விட்டு வெளியேறுவார் என்றார்.

## தையிட்டியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் தொடர்பில் மல்லாகம் நீதிமன்றம் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமாரை இன்று நீதிமன்றத்தில் முற்படுமாறு அழைப்பாணை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்ததாவது:

சிறிலங்கா ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருந்த கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின்போது, மக்களின் தனியார் காணிகளை அபகரித்து தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கட்டுமானங்களை அகற்றி மக்களின் காணிகள் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். அதன் பின்னர் சமூக ஊடகங்களில் தையிட்டி விகாரையை இடிக்கவாரீர் என்று எனது பெயரில் போலியான அழைப்புக்கள் விடுக்கப்பட்டிருந்தன. அது எனது அழைப்பு அல்ல என்று குறித்த விடயத்தை மறுத்து எனது தெளிவுபடுத்தல்களை வெளிப்படுத்தியிருந்த போதிலும், சிறிலங்கா பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பெப்ரவரி 14 வருமாறு அழைப்புக்கட்டளை எனக்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (100)

## மின்வெட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மின்சார விநியோக அமைப்பில் ஏற்பட்ட சமச்சீரின்மை காரணமாக இந்த திடீர் மின்வெட்டு ஏற்பட்டதாக தொடக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாடுமுழுவதும் ஒரே நேரத்தில் மின்வெட்டு ஏற்பட்டால், நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் சேதம் ஏற்படும் என்பதால், இது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க ஆளும்தரப்பு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

## 12 சீனர்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதவான் ஹர்ஷன கெக்குனவெல நேற்று உத்தரவிட்டார்.

மத மற்றும் குடிவரவுச் சட்டங்களை மீறியதாகக் கண்டறியப்பட்ட குற்றவாளிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படவேண்டும் என்றாலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விரைவில் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டு விசாக்களைப் பெற்றுள்ளனர் என்பதைக் கருத்தில் கொண்டு நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று நீதிவான் கூறினார். குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்களை கருப்புப் பட்டியலில் சேர்க்க குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளுக்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 50,000 வீதம் அல்லது 6.5 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அபராதம் செலுத்தப்படாவிட்டால், குற்றவாளிகளுக்கு கட்டாய ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் உத்தரவிடப்பட்டது. குற்றவாளிகளுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாலா ஒரு வருடம் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

## குரங்குச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது பழி சுமத்தினார். 33,000 மெகாவோல்ட் கொண்ட மின் பிறப்பாக்கி விடுதலைப் புலிகளால் தீ வைக்கப்பட்ட போது கூட இவ்வாறு தேசியளவில் மின்சாரம் துண்டிக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் ஒரு குரங்கால் முழு நாட்டுக்கும் மின் துண்டிப்பை ஏற்படுத்த முடியுமா? அமைச்சரால் குறிப்பிடப்பட்ட இந்த கருத்து பாரிய சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், பின்னர் கடந்த கால ஆளும்தரப்புகளின் செயற்பாடுகளே இதற்குக் காரணம் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

கடந்த ஆளும்தரப்புக்களைக் குறைக்கூறியே இவர்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். தற்போது ஆட்சியிலிருந்து கொண்டும் இதனையே கூறுகின்றனர்.

முறைமைமாற்றங்களை ஏற்படுத்தியதாகக் கூறியவர்களின் இயலாமை தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளது. நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திலுள்ள மின் பிறப்பாக்கிகள் செயலிழந்தமையால் இந்நிலைமை ஏற்பட்டது எனக் கூறினர்.

கடந்த காலங்களில் நுரைச்சோலை மின் பிறப்பாக்கிகள் செயலிழந்த சந்தர்ப்பங்களில், அது தொழிற்சங்க மாபியாக்களின் செயல் என விமர்சித்தனர். அவ்வாறெனில் இந்த ஆளும்தரப்பாலும் அந்த மாபியாக்களை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளதா?

சூரிய மின்கல மின்சார உற்பத்தி அளவு அதிகம் என இலங்கை மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கம் குறிப்பிடுகிறது. சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்திகள் பிரபலமாகும் பட்சத்தில் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்கள் பாதிக்கப்படுவர். எனவே அவற்றைப் பாதுகாப்பதற்காகவே இவ்வாறான கதைகள் கூறப்படுகின்றன.

இந்த மாபியாக்களின் தேவைக்கேற்ப செயற்படுவதற்கு ஆளும்தரப்பு இணங்கியுள்ளதா? நுரைச்சோலை மின்பிறப்பாக்கிகள் செயலிழக்கப் போவதை அறிந்தே ஆளும்தரப்பு அதற்கு இடமளித்திருக்கிறது. இந்த உண்மையை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

மேடைகளில் வீர வசனம் பேசுவதைவிட, நடைமுறையில் ஆட்சி செய்வது சிக்கல் என்பதை இப்போது ஜே.பி.வி. புரிந்துகொண்டிருக்கும். ஏனைய ஆட்சி காலங்களில் இவ்வாறு ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தால் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாகக் குறிப்பிட்டு ஜே.வி.பியினர் வீதிக்கிறங்கியிருப்பர். தமது ஆட்சி என்பதால் மௌனமாக இருக்கின்றனர்.

அளவுக்கதிகமாக மக்களை ஏமாற்ற முற்பட வேண்டாம். ராஜபக்சக்களை ஆட்சியில் அமர்த்தி, அவர்களைத் துரத்துவதற்கு மைத்திரிக்கு வாக்களித்து பின்னர் கோட்டாபயவை நாட்டைவிட்டு ஓடச் செய்தவர்களே உங்களையும் ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர் என்பதை மறந்துவிட வேண்டாம் என்றார்.

## போதைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

கடமையின்போது போதைப்பொருள் பயன்படுத்தும் அதிகாரிகளின் பட்டியலை புலனாய்வு அமைப்புகள் வழங்கியுள்ளன எனவும், அந்தப் பட்டியல் பதில் காவல்துறை மா அதிபர் பிரியந்த வீரசூரிய மூலம் அனைத்து மூத்த அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

பட்டியலிடப்பட்டவர் மீது விசாரணைகள் நடத்தப்படும் என்றும், அவர்கள் மருத்துவ பரிசோதனைகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்றும், அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்துகிறார்கள் என்பது உறுதிசெய்யப்பட்டால், அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என்றும் மனதுங்க கூறினார்.

போதைப்பொருள் பயன்படுத்தும் மேலும் பல பொலிஸார் மீதும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், அவர்கள் போதைப்பொருள் பயன்படுத்துவது உறுதிசெய்யப்பட்டால், எந்தவித கருணையும் இல்லாமல் கடுமையான முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்று பதில் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார் எனவும் காவல்துறை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி நிரலையும் பிரதமர் இதன்போது கோடிட்டுக் காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிர்வாக இயக்குனர் கலாநிதி ஹரிச்சந்திராவும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் இக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## பாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற வெற்றிக்காக பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீப், ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை வலுப்படுத்துவதிலும், சந்தைகளைப் பன்முகப்படுத்துவதிலும் தலைவர்கள் கவனம் செலுத்தினர். மேலும் அந்த நோக்கத்திற்காக ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் விவாதித்தனர்.

தற்போதைய ஆளும்தரப்பால் செயல்படுத்தப்படும் பொருளாதார வேலைத்திட்டம் குறித்து பாகிஸ்தான் பிரதமருக்கு விளக்கமளித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தற்போதைய

தொடர்ச்சி 8ம் பக்கம்....

### அனுர உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்க உதவிய தமிழ்ப் பிரதிநிதிகள் வலியுறுத்துவார்களா?

### சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி

தையிட்டியில் சட்டவிரோதமாக தனியார் காணியில் கட்டப்பட்ட புத்தகோயிலை இடிக்க முடியாது என்று அண்மையில்

அனுர தெரிவித்துள்ள கருத்துக்கு கண்டனம் வெளியிட்டுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்

சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தமிழ் பகுதிகளில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் பௌத்தமயமாக்கல்

சிங்களமயமாக்கல்திட்டங்களைநிறுத்தும்படியும் கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் முழுவிவரம் வருமாறு: -

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சிங்கள மக்களோ பௌத்த மக்களோ வாழாத இடங்களில் இலங்கை அரசாங்கமும் பௌத்த பிக்குகளும் இராணுவத்தினரை முன்னிறுத்தி புதிய பௌத்த ஆலயங்களைக் கட்டத்தொடங்கினர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை சிங்கள பௌத்த மயமாக்குதலே அதனுடைய பாரிய நோக்கமாக இருந்தது. அந்த வகையில் வடக்கு மாகாணத்தின் பல்வேறுபட்ட இடங்களில் புத்த கோயில்கள் உருவாக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நாவற்குழி, மன்னாரில் திருக்கேதீஸ்வரம், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இத்தகைய புதிய பௌத்த ஆலயங்கள் உருவாக்கப்பட்டன.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலும் புதிய புதிய பௌத்த ஆலயங்கள் இன்றும் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கு என்பது தமிழ் மக்களின் தாயகம் என்பதை இல்லாமற் செய்வதற்கும் இந்த சிங்கள பௌத்தமயமாக்கல் என்பது அரசிற்குத் தேவையாக இருந்தது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் பலாலி, தையிட்டியிலும் பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்த தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளை பலாத்காரமாகக் கையகப்படுத்தி அங்கு ஒரு பாரிய புத்த கோயிலை நிறுவியிருக்கின்றனர். இந்த புத்த கோயில்கட்ட ஆரம்பிக்கின்றபொழுதுயாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுவானது தனியார் காணிகளை பலாத்காரமாகக் கையகப்படுத்தியது சட்டவிரோதமானது என்றும் எந்தவிதமான அனுமதிகளும் பெற்றுக்கொள்ளப்படாமல் புத்த கோயில் கட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும் அந்தசெயற்பாடுஉடனடியாகநிறுத்தப்படவேண்டும் என்றும் ஆரம்பத்திலேயே வலியுறுத்தியிருந்த போதிலும்கூட அது எந்த விதத்திலும் கவனத்தில் எடுக்கப்படாமல் இப்பொழுது அந்த புத்தகோயில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுதுபுதிதாகப்பதவியேற்றுள்ளஇடதுசாரி அரசாங்கமானது சாதி, மத, இன பேதங்களற்ற சமத்துவமான இலங்கையை கட்டியெழுப்ப வேண்டுமென பேசி வருகின்றது.

ஆனால் வடக்கு - கிழக்கில் பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி சட்டவிரோதமாக உருவாக்கப்பட்டு வரும் பௌத்த ஆலயங்கள் தொடர்பாக இன்னும் வாய்மூடி மௌனியாகவே இருந்து வருகின்றது.

யுத்த காலத்தில் உருவாக்கப்பட்ட அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் இருந்த பல்வேறுபட்ட சைவ கிறித்தவ ஆலயங்கள் எந்தவிதக் கேட்டுக்கேள்வியும் இல்லாமல் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று தென் பகுதியிலும்கூட பள்ளிவாசல்களும் சைவக் கோயில்களும் இடிக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்பொழுது தையிட்டியில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோதமான ஒரு பௌத்த ஆலயம் எக்காரணம் கொண்டும் இடிக்கப்படமாட்டாது என்று அனுரகுமார திஸ்ஸநாயகவின் தலைமையிலான இடதுசாரி அரசாங்கமும் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கின்றது.

இது சிங்கள மக்களுக்கு ஒரு சட்டம் ஏனைய மக்களுக்கு ஒரு சட்டம் என்பதைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது. சாதி, மத, மொழி, இன பேதமற்ற ஓர் இலங்கையை உருவாக்க வேண்டுமென இப்பொழுது உள்ள புதிய அரசாங்கம் உண்மையிலேயே விரும்புமாக இருந்தால், வடக்கு-கிழக்கு எங்கும் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து பௌத்த ஆலயங்களின் கட்டுமானப் பணிகளும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

சிங்கள மக்களோ பௌத்தர்களோ இல்லாத இடங்களில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்த பௌத்த ஆலயங்கள் தொடர்பாக அரசாங்கம் தெளிவான முடிவிற்கு வரவேண்டும். தன்னை ஓர் இனவாதியோ மதவாதியோ அல்ல என்று காட்ட முயற்சிக்கும் அனுர அரசாங்கமானது நடைமுறையில் இனவாதத்தையும் மதவாதத்தையும் முன்னிலைப்படுத்துவதை முழுமையாக உடனடியாகக் கைவிட வேண்டும். தையிட்டி புத்த கோயில் நிர்மாணம் என்பது ஒரு குறியீடு மட்டுமே.

ஆகவே இவற்றிற்கெதிரான கடுமையான கண்டனத்தை, மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பதிவுசெய்வதுடன் இதற்காக மக்கள் முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களுக்கும் ஆதரவளிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அனுர அரசாங்கம் மாற்றத்தை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையில் அந்த கட்சியில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் சிலரை தமிழ் மக்கள் வாக்களித்து தெரிவுசெய்திருக்கின்றார்கள். ஆகவே அந்தப் பிரதிநிதிகள் தமது மக்கள் நலன்சார்ந்து அவர்கள் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் இவ்வாறான சட்டவிரோத செயல்களுக்கு எதிராக குரல்கொடுக்க முன்வரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் புதிய மாணவிகளுக்கு வரவேற்பு நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

2025 ஆம் கல்வியாண்டுக்கான தரம் 06 இற்கு புதிய மாணவிகளை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் பாடசாலை சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.





இந்நிகழ்வில் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலய பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் விசேட அதிதியாக சியபத நிதி நிறுவனத்தின் சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் முஹம்மத் பிரிம்சாத் கலந்து கொண்டார்.

பாண்ட் வாத்தியம் இசைக்கப்பட்டு அழைத்துவரப்பட்ட மாணவர்கள் சிரேஷ்ட மாணவர்களால் வரவேற்கப்பட்டனர். இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.மசூது லெப்பை, எம்.எச். நதீரா, உதவி அதிபர்களான எம்.எஸ்.மநூனா, என். தர்ஷன் நதீஹா மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களின் பெற்றோர்களால் சீரமைத்து புனரமைக்கப்பட்ட வகுப்பறைகள் மாணவிகளின் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.

## மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் ‘கிளீன் சிறீலங்கா’ வேலைத் திட்டங்கள்

(ஷினாஸ்)

நாட்டின் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அவர்களின் வழிகாட்டலுக்கு அமைய தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் கிளீன் சிறீலங்கா வேலை திட்டத்தின் கீழ் பாடசாலையின் சுற்றுச்சூழல் மற்றும் வகுப்பறைகளைசுத்தம்செய்து அழகுபடுத்தும் வேலை திட்டம் திங்கட்கிழமை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.



பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் தலைமையில் நடைபெற்ற இந்த வேலை திட்டத்தின் போது பாடசாலையின் பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். குறித்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் அதிபர் தனது நன்றிகளை தெரிவித்துள்ளார்.





# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆட்சியாளர்கள் நீக்குவது எப்போது?

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று மீண்டும் குரல் எழுப்பப்பட்டுள்ளது. இந்தத் தடவை மக்கள் பேரவைக்கான இயக்கம் இது தொடர்பில் குரல் எழுப்பியுள்ளது. தனது அறிக்கை ஒன்றில் அது இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

”சிறுபான்மை மக்களையும் ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான அரசியல் செயற்பாட்டாளர்களையும் மற்றும் கட்சிகளையும் ஒடுக்கும் முதன்மை நோக்கத்துடன் 1979ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாட்டுச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த நான்கரை தசாப்தங்களாக மக்களை அடக்குவதற்கு ஆளும்தரப்புக்கள் இந்தச் சட்டத்தை எவ்வாறு பயன்படுத்தின என்பதை நாங்கள் கண்டோம்.

1988/89 இளைஞர் எழுச்சியின்போது ஆயிரக்கணக்கான இளைஞர்களை அடக்குவதற்கும் வடக்கு கிழக்கில் தமிழர்களை அடக்குவதற்கும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் முஸ்லிம்களை அடக்குவதற்கும் 2022க்குப் பின்னர் போராட்டச் செயற்பாட்டாளர்களை அடக்குவதற்கும் இச்சட்டத்தின் விதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாம் நன்கு அறிந்திருக்கும் அதேவேளை தற்போதைய ஆளும்தரப்பின் முக்கிய பங்குதாரர் கட்சியான ஜேவிபியும் அந்தச் சட்டத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஓர் இயக்கமாகும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்காக முற்போக்குவாதிகள் நான்கு தசாப்தங்களாகப் போராடி வருகின்ற நிலையில் இந்தச் சட்டத்தை நீக்குவதாக உள்நாட்டில் மட்டுமல்லாது, சர்வதேச அளவிலும் உறுதியளிக்கப்பட்டது. தேசிய மக்கள் சக்தி கடந்த தேர்தலில் தனது அறிக்கையில்கூட பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளது எனவே நாடாளுமன்றத்தில் உங்களுக்குள்ள பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சாக்குப் போக்குச் சொல்லாமல், நீங்கள் ஆட்சிப் பீடம் ஏற்றுவதற்காக வாக்களித்த முற்போக்கான, அறிவார்ந்த மக்களுக்காக இந்த தருணத்தில் நிதைவேற்ற வேண்டிய வாக்குறுதி இது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்குப் பதிலாக மாற்றுச் சட்டமூலம் கொண்டுவரப்படும் எனவும் தற்போதுள்ள பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வாய்ப்புள்ள சூழ்நிலையில், அவ்வாறான மாற்றுச் சட்டமூலத்தைக் கொண்டுவரமுடியாது எனவும் பல்வேறு அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாறு வேறொரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் மீண்டும் மீண்டும் மக்கள் மீதான அடக்குமுறையைத் தொடங்குவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கவேண்டாம் என்று அரசிடம் வலியுறுத்துகின்றோம்’’ என்று அது தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி பல தரப்புக்களும் மிக நீண்ட காலமாகவே வலியுறுத்தி வந்திருக்கின்றன. இன்றைய ஆளும்தரப்பும் கடந்த காலங்களில் மிகப் பலமாக அதனை வலியுறுத்தி வந்திருக்கின்றது. இந்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்கிற தமது கொள்கையில் மாற்றம் இல்லை என்று அண்மையில் நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்தியுமுள்ளது. அது எப்போது செய்யப்படும் என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. அதற்கான அறிகுறிகள் எவையும் வெளிக்காட்டப்படாத நிலையில் இந்தக் கேள்விதான் மீண்டும் மீண்டும் அந்தச் சட்டத்தை நீக்குவதற்கான அழுத்தங்களைக் கொடுக்க வைக்கிறது.

## அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல்

(தில்சாத் பர்வீஸ்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அல் ஹாஜ் ரவூப் ஹக்கீம் தலைமையில் திங்கட்கிழமை மாலை வேளையில் சம்மாந்துறை விளையாட்டு கட்டடத் தொகுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட உச்சபீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தல் கேட்கும் வேட்பாளர்கள் மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.









## மூதூர் பாட்டாளிபுரம் பகுதியில் இலவச சைக்கிள்கள் வழங்கல்

(ஹலால்தீன்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாட்டாளி புரம் கிராமத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சைக்கிள்கள் இலவசமாக வழங்கப்பட்டன.



மூதூர் பாட்டாளிபுரம் எம்கடமை அமைப்பினரால் இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

எம் கடமை அமைப்பின் இலவசக் கல்வி நிலையத்தில் கல்வி கற்று வரும் மாணவர்களுக்கே சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த சைக்கிள்கள் கனடா நாட்டில் வசிக்கும் இளைய தம்பி ஏகாம்பரம் அவர்களின் ஏற்பாட்டில் அவரின் நண்பர்களின் உதவியில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தூர இடத்தில் இருந்து இலவசக் கல்வி நிலையத்தில் கல்வி கற்க வருகின்ற பிள்ளைகளுக்கு இது மிகவும் உதவியாகவும் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு துணையாகவும் இருக்கும் என அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்தார்.

## 18 கிலோ 169 கேரளகஞ்சாவுடன் சாய்ந்தமருதில் விசேட அதிரடிப் படையினரினால் ஒருவர் கைது

(ஹமீட்)

சாய்ந்தமருதில் 18 கிலோ 169 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் - சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திங்கட்கிழமை காலை வேளையில் கல்முனை விசேட அதிரடிப் படையினரால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கடந்த 4ஆம் திகதி கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் இருவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில், சாய்ந்தமருதில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 33 வயது மதிக்கத்தக்க ஒருவரின் வீட்டினை சோதனை செய்த வேளையில், கட்டிலின் கீழ் பகுதியில் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேகத்தின் பேரில் வீட்டு உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் இருந்து 18 கிலோகிராம் 169 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் சான்றுப் பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது, கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ்பரிசோதகர் ஆர்.டி. சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் நிலைமை குறித்து ஆளும்தரப்பு எம்.பிக்கள் நேரில் களஆய்வு

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் நிலைமை தொடர்பில் பிரதி அமைச்சர் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் திங்கட்கிழமை நேரில் சென்று அவதானம் செலுத்தியுள்ளனர்.

அந்தவகையில், வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட தர்மபால வித்தியாலயம், சிறி சுமண மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க அவர்களும், நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம், அல் இக்பால் மகாவித்தியாலயம், பாவற்குளம் மகாவித்தியாலயம், அல் அமீன் மகாவித்தியாலயம், வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகியவற்றுக்கு ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனும் விஜயம் செய்திருந்தனர். இவர்களுடன் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தனும் சென்றிருந்தார்.



இதன்போது பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி பாடசாலைகளின் தேவைப்பாடுகள், பௌதீக மற்றும் ஆளணி வளம் தொடர்பிலும் மாணவர்களது பிரச்சினைகள், ஆசிரியர்களது பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், பாடசாலை வளாகம் அதன் சூழல், மலசலகூட வசதி மற்றும் குடிநீர் வசதி என்பன தொடர்பாக நேரடியாக அவதானிக்கப்பட்டதுடன், அங்கு காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

பாடசாலைகளை பார்வையிட்ட பின், புதிய வரவு செலவுத் திட்டம் மற்றும் விசேட ஒதுக்கீடுகள் மூலம் குறித்த பாடசாலைகளில் இனங்காணப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், தேவையான ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்து இருந்தார். 100





# வவுனியாவில் மீண்டும் மாணவன் மீது கூரிய ஆயுதத்தால் கோரத் தாக்குதல்

## பொலிஸாரின் அசமந்தமே காரணம்

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் போதை ஆசாமிகள் உயர்தர வகுப்பு மாணவன் மீது கண்ணாடித் துண்டுகளால் வெட்டியதில் மாணவன் பலத்த காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை மாலை வைரவபுளியங்குளத்தில் உள்ள தனியார் கல்வி நிலையத்தில் கற்றல் செயற்பாட்டை முடித்து வீதியால் சென்று கொண்டிருந்த உயர்தர வகுப்பு மாணவன் மீது வைரவபுளியங்குளத்தில் வழமையாக கூடிநிற்கும் போதைக்கு அடிமையான இளைஞர்கள் குழு கண்ணாடி துண்டுகளால் வெட்டியுள்ளனர்.

இதன் காரணமாக மாணவன் காயம் அடைந்த நிலையில் அங்கு நின்றவர்களால் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை அளிப்பதற்காக அம் மாணவனை பாதுகாப்பாக அழைத்துச் சென்றுள்ளனர். இந்நிலையில் குறித்த போதை ஆசாமிகள் தாக்குதலை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சியாக இந்த போதைக்கு அடிமையான இளைஞர்கள் குழு அப்பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் கற்றல் செயற்பாட்டை முடித்து வரும் மாணவர்கள் மீது தாக்குதலை நடத்துவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாரும், தற்போதைய மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் அசமந்தமாக இருப்பதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். 100



காலைக்கதிர்
Kalaikkathir

# சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காத உணவகத்திற்கு எதிராக சட்டநடவடிக்கை

## 20 ஆயிரம் ரூபா தண்டப் பணம்

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள சிற்றுண்டி சாலை சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

குறித்த முறைப்பாடுக்கு அமைய திங்கட்கிழமை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையிலான குழுவினரால் திடீர் சோதனை நடவடிக்கை இடம் பெற்றது.





இதன் போது, சுகாதார வைத்திய அதிகாரிகளால் குறித்த சிற்றுண்டி சாலை உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது ரூபா 20 ஆயிரம் தண்டப்பணம் அறவிட்டது மட்டுமன்றி எச்சரிக்கையும் செய்யப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கையில் பொதுச் சுகாதார பரிசோதகளான எம்.டி. நசார், டி. தினேஸ், ஏ.எம். றம்சீன் உள்ளிட்ட அதிகாரிகள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் மாவட்ட பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் பாராட்டு

(அஷ்ரப்கான்)

சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் ஏற்பாட்டில் தேசிய ரீதியில் மாவட்ட பணிப்பாளர்கள், அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் கௌரவிப்பு விழா சனிக்கிழமை கொழும்பு செரண்டிப் கிரேன்ட் மண்டபத்தில் அமைப்பின் தேசியத் தலைவர் துவான் ரிஸ்வான் காசீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கௌரவ அதிதிகளாக பொலிஸ் துறை, பாதுகாப்பு துறை உயர் அதிகாரிகள், சர்வமத தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் அமைப்பின் அம்பாறை, கொழும்பு, கம்பஹா, கண்டி உட்பட பல மாவங்களைச் சேர்ந்த சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பாராட்டி



கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு அமைப்பின் உயர்பீட உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.









# வவுனியாவில் குளவி கொட்டியதில் 9 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் குளவி கொட்டியதில் 9 பேர் பாதிக்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் வீதியில் பலர் பயணித்துக் கொண்டிருந்த போது கூட்டமாக பறந்து வந்த குளவிகள் அவர்கள் மீது குத்தியுள்ளன.

இதில் இரண்டு சிறுவர்கள் உட்பட 9 பேர் குளவிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். 100

# 'எல்ல ஒடிசி நானுஓயா' என்ற புதிய ரயில் சேவை ஆரம்பம்!




(கிஷாந்தன்)

நானுஓயா ரயில் மற்றும் பதுளை ரயில் நிலையங்களுக்கு இடையிலான 'எல்ல ஒடிசி நானுஓயா' என்ற புதிய ரயில் சேவை திங்கட்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நானுஓயா ரயில் நிலைய வளாகத்தில் நடைபெற்ற விஷேட சமய வழிபாட்டு நிகழ்வின் பின்னர், ரயில் பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தலைமையில் ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பயணிகளின் சுற்றுலா தேவையின் அடிப்படையில் இந்த ரயில் சேவையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த ரயில் செவ்வாய்க்கிழமையை தவிர வாரத்தின் ஒவ்வொரு வார நாள்களிலும் காலை 8.10 மணிக்கு நானுஓயாவிலிருந்து பதுளைக்கும் பிற்பகல் ஒரு மணிக்கு பதுளையிலிருந்து கண்டிக்கும் இயக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் வகுப்பில் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளுக்கு 7,000 ரூபாவும் இரண்டாம் வகுப்பில் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளுக்கு 6,000 ரூபாவும் மூன்றாம் வகுப்பில் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைகளுக்கு 5,000 ரூபாவும் கட்டணம் அறவிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த ரயில் சேவையினை பாராட்டி நானுஓயா ரயில் நிலையத்தில் பெருளமளவான வெளிநாட்டு ,உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் , சுற்றுலா பயணிகள் வழிகாட்டிகள் மற்றும் பொதுமக்கள் இந்த ரயில் சேவையைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# ஆலையடிவேம்பு பிரதேசத்தினது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பிரதேச செயலாளர் திரவியராஜ் ஏற்பாட்டில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவாவின் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள ரத்நாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தேசிய மக்கள் சக்தியின் கரையோர பிரதேச இணைப்பாளர் ரவி, பிரதேச செயலக உதவிச் செயலாளர் மற்றும் கணக்காளர் மற்றும் பிரதேச செயலக உத்தியோத்தர்கள், முப்படையினர் ,திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியோக செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்தி கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைபெற்றனவா? என குறித்த அதிகாரிகளிடம் ஆராயப்பட்டது.

மேலும் இப்பிரதேச செயலக பிரிவிலுள்ள குடிநீர் பிரச்சினை, வீதி புனரமைப்பு, யானை வேலி அமைப்பது பற்றி கலந்துரையாடப்பட்டதுடன் விரைவில் இதற்கான தீர்வுகள் மக்களுக்கு சென்றடைய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.






## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் பேருந்தில் கைது

(கிஷாந்தன்)

கொழும்பிலிருந்து பொகவந்தலாவ நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை இரண்டு மில்லிகிராம் ஐஸ் என்ற போதைப்பொருளுடன் பொகவந்தலாவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து பொகவந்தலாவை நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸில் ஒருவர் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்ததாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொகவந்தலாவ பொலிஸ் அதிகாரிகள், குறித்த பஸ் பொகவந்தலாவ நகருக்கு வந்ததன் பின் அவரை சோதனையிட்டுள்ளனர். அப்போது ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் இருப்பதை கண்டறிந்தனர்.

பொகவந்தலாவ பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் வசிக்கும் 38 வயதுடைய சந்தேக நபர் போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும், சந்தேக நபர் போதைப்பொருள் கடத்தல் தொழிலில் ஈடுபட்டுள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பாக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும்தரப்பு ஊழல் இல்லாத மற்றும் வெளிப்படையானபொருளாதாரநிர்வாகத்தைச் செயல்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார். இதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நல்ல அடித்தளத்தை அமைக்க முடியும் என்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது பாகிஸ்தானுக்கும்இலங்கைக்கும்இடையிலான சுற்றுலாத்துறையைமேம்படுத்துவதுகுறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தில்செயலிழந்தமூன்றுமின்னுற்பத்தி இயந்திரங்களையும்மீண்டும்மின்னுற்பத்திக் கட்டமைப்பில்இணைப்பதற்குப்பலபகுதிகளில் மின்வெட்டைநடைமுறைப்படுத்த இலங்கை மின்சாரசபை தீர்மானித்திருந்தது.

அதன்படி, நாட்டில் பல பகுதிகளில் திங்கட்கிழமை முதல் மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## நட்டத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்சாரசபையும், மின்சாரசபையின் பொறியியலாளர் சங்கமும் மின் வெட்டு தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன. மின் கட்டமைப்பில்ஏற்பட்டசமநிலையற்றதன்மை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானபிரச்சினைகள்ஏற்படும்போது அவற்றுக்குநிரந்தத்தீர்வினைவழங்குவதற்கு உரியதரப்புக்கள்நடவடிக்கைஎடுத்துள்ளன. குறுகிய கால நடவடிக்கைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மின் தடையால் ஏற்பட்ட நட்டம் தொடர்பில் இதுவரையில் மின்சாரசபை எவ்வித அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

நட்டம் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்

# ஊடகவியலாளர்களின் கௌரவம், சுதந்திரத்தை பாதுகாக்கச் செயற்பட்டவர் அண்ணன் பாரதி

## விவேக ஊடக ஒன்றியம் அனுதாபம்

(அபு அலா)

மிகவும் அமைதியான சுபாவத்தைக் கொண்ட மூத்த பத்திரிகை ஆசிரியர் அண்ணன் பாரதி இராஜநாயகம் அவர்களின் மறைவு ஆழ்ந்த கவலையளிப்பதாக திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் விவேக பார்வை ஊடக மையத்தின் தலைவர் எஸ்.எம்.முபீன் தனது அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஊடகவியலாளர்களின் கருத்துக்களில் இருக்கின்ற நியாயங்களைபுரிந்துகொண்டுஅவர்களின்உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளித்து, ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்கியதுடன் ஊடகவியலாளர்களுக்கான கௌரவமும், பாதுகாப்பும், சுதந்திரமும் கிடைக்க வேண்டும் என்ற நன்நோக்கில் செயற்பட்ட ஒருவராவார்.

அமைதியான அணுகுமுறைகளையும் ஆழமான கருத்தியலையும் கொண்டிருந்த அண்ணன் பாரதி அவர்கள், ஊடக அறத்தின் வழிநின்று அனைத்து தரப்பினருடனும் மிக அன்பான உறவுகளை பேணியவராவார். குறிப்பாக ஊடகத்துறையில்மிகஆழமானதடயங்களைப்பதித்துவிட்டு, தமிழ் ஊடகத்துறைக்கு பாரிய வெற்றிடத்தையும் ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார்.

அன்னாரின் இழப்பு, தமிழ் ஊடகத்துறைக்கு மட்டுமின்றி தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்கும், மக்களுக்கும் பாரிய பேரிழப்பாக அமைந்துள்ளது.



அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் விவேக ஊடக ஒன்றியம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

## பரந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்து மோதியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பரந்தன் காஞ்சி கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை இந்த விபத்தில் உயிரிழந்தார். (316)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# பெயருக்கேற்ப வாழ்ந்த இனிய நண்பன் பாரதி

## சுரேஸ் பிரேமச்சந்திரன் இரங்கல்

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பதிழுக்கு' என்னும் குறளுக்கேற்ப தனது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கி அணைவரையும் கண்ணீரில் நனையவிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ்வுலகை விட்டு விடைபெற்றிருக்கிறான் என் நண்பன் பாரதி இராசநாயகம்.

- இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஸ் க.பிரேமச்சந்திரன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக இரங்கல் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

ஓர் ஊடகவியலாளராக அறிமுகமானபோதிலும் இறுதி மூச்சுவரை தமிழ்த் தேசியத்திற்காக அயராது உழைத்து எம்மனதில் நீங்கா இடம்பிடித்த உற்ற நண்பன் பாரதி. தினக்குரல், வீரகேசரி, பொருண்மியம், தமிழருவி என்று ஊடகத்துறையில் தனது தடங்களை ஆழமாகப் பதித்து ஓர் ஊடகவியலாளர் எப்படி கடமையாற்ற வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்து காட்டியிருக்கின்றார் அவர்.

சமூக அக்கறையுடனும் துணிவுடனும் இலக்கிய ரசனையுடனும் அவர் ஆற்றிய பணிகளை நன்றியுடனும் பெருமிதத்துடனும் நினைத்துப்பார்க்கிறேன். அவர் எழுதிய பத்தி எழுத்துகளும், அரசியல் கட்டுரைகளும் ஆசிரியர் தலையங்கங்களும் பிரமிக்கத்தக்கவை. புதிதாக ஊடகத்துறைக்கு வருகைதரும் இளைஞர்களை வழிநடத்துவதிலும் எழுதத்துடிக்கும் பத்தியெழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதிலும் அவர் காட்டிய அர்ப்பணிப்பு அளப்பரியது. புதிய தொழில்முயற்சியாளர்களுக்கு தன்னாலியன்ற உதவிகளைச் செய்து கொடுப்பதிலும் வழிப்படுத்துவதிலும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுப்பதிலும் அவர் காட்டிய கரிசனைகளை பட்டியலிடுவது கடினம்.

உதவி என்று கேட்டுவந்தவர்களுக்கு தன்னாலியன்ற உதவிகளைச் செய்து கொடுப்பதுடன் அவர்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்கான வழிகளையும் ஏற்படுத்திக்கொடுத்தவர். எத்தனை சமூக ஊடகங்கள் அவரது ஆலோசனைகளின் கீழும் போசிப்பின்கீழும் வளர்ந்திருக்கின்றன! அவற்றின் வளர்ச்சியை என்றும் அவர் சொந்தம் கொண்டாடியவரல்லர் அவர்.

அரசியல் களத்தில் சமூக நலன்சார்ந்து நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு தனக்கு இருக்கும் சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபெற்றபின் அவற்றிற்கு செயல்வடிவம் கொடுப்பதில் முன்னின்று உழைத்த உத்தமர். எப்பொழுதுமே சமூகநலன் சார்ந்து மட்டுமே சிந்தித்த உண்மையான சமூகப் போராளி.

கருத்துத் தெரிவிப்பவர்களின் கருத்தை முழுமையாகக் கேட்டுவிட்டு அதன் பின்னரே தாம் பேசத்தொடங்கும் பண்பாளர். ஆழ்ந்து அவதானிக்கும் தீட்சண்யமிக்க பார்வை, சிரித்த முகம், இன்சொல், அதிகாரமற்ற குரல், சோர்வின்றி உழைக்கும் கடமையுணர்வு, முதல் சந்திப்பிலேயே பலநாள் நண்பர்போல் உறவாடும் பாங்கு இவைகளை இனி யாரிடம் காணப்போகின்றோம்?

ஓர் ஊடகவியலாளர் என்பதற்கும் அப்பால் சிறந்த மனிதநேயராகவும் சமத்துவ சமநீதிக்காக உழைத்தவராகவும் குறிப்பாக தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகவும் பலமுனைகளில் களமாடியவராகவும் அவருடன் பழகிய அணைவரின் மனதில் இடம்பிடித்தவராகவும் எமது பாரதி வாழ்ந்திருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட பின்னர் அவரது செயல்வேகம் போற்றத்தக்கதாய் இருந்தது. இவை அனைத்திற்கும் மேலாக மருத்துவமனையிலிருந்து வீடு வந்த எனது பாரதி மீண்டும் மிடுக்குடன் வலம்வருவான் என்ற நம்பிக்கையுடன் அவன் தனது மூச்சை நிறுத்துவதற்கு சற்றுமுன்னர் அவனது வீட்டில் அவனைச் சந்தித்து நலம் விசாரித்து அவனோடு உரையாடி எனது வீட்டிற்கு வந்த சில மணி நேரத்தில் இடியாக அவன் இவ்வுலகைவிட்டு நீங்கிய செய்தி நண்பர் றொஷானிடமிருந்து கிட்டியது.

பாரதியின் உடல் இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் அவரிடமிருந்து உதவிபெற்றவர்களும் அவரால் வளர்த்தெடுக்கப்பட்டவர்களும் அவரது சமூக அக்கறையை அறிந்தவர்கள் அவருடன் சிரித்துப் பழகியவர்கள் என அனைவரின் மனங்களிலும் அவர் என்றும் வாழ்வார்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது துணைவியார், மகன், சகோதரர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். சென்று வா பாரதி. - என்றுள்ளது.

# புத்தளம் வை.எல்.டீ.பீயின் தலைமைத்துவப் பயிற்சி

(சியாஜ்)

மதுரங்குளி மேசி கல்வி நிலையத்தில் இரண்டாம் நிலை தொழில் கல்வியை தொடர்கின்ற இளைஞர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சியை புத்தளம் வைஎல் டீ.பீ தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தலைவர் ஐ. அஸ்ரிக் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி தலைமைத்துவ பயிற்சியின் வளவாளராக வைஎல்டிபியின் 07 தன்னார்வ தொண்டர்கள் கலந்து கொண்டதுடன் மேசி கல்வி நிலையத்தில் தொழில் கல்வியை மேற்கொள்ளும் சுமார் 120 இளைஞர்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.





# கிளிநொச்சியில் ஜப்பான் தூதுவர்

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ இசோமட்டா நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கரோலஸ் மனிதாபிமான கண்ணியகற்றும் செயற்பாடுகளை முகமாலைப்பகுதிக்கு சென்று பார்வையிட்டார். 316.









காலைக்கதிர் Kalaikkathir

# கற்பிட்டி சமுர்த்தி வங்கிக்கான புதிய பரிபாலன சபை தெரிவு

(சியாஜ்)

கற்பிட்டி சமுர்த்தி வங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான புதிய பரிபாலன சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவிற்கான கூட்டம் திங்கட்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் கற்பிட்டி சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் டப்யூ.எம் தினுஷா தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி கூட்டத்தில் கற்பிட்டி சமுர்த்தி வங்கி பிரிவில் உள்ள பத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த வங்கியின் வாடிக்கையாளர்களை உள்ளடக்கிய வண்ணம் பரிபாலன சபைக்கு ஒரு கிராம



சேவையாளர் பிரிவில் ஒருவர் வீதம் பத்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அதன்படி 2025 ஆம் ஆண்டின் புதிய உறுப்பினர்களாக:

புதுக்குடியிருப்பு - சர்மிளா

பெரியகுடியிருப்பு - சப்னா

சின்னக்குடியிருப்பு - பாத்திமா

டச்பே - நெலும் குமாரி

ஆனவாசல் - நதிகா சுபாசினி

வன்னிமுந்தல் - நஸ்ரின்

மண்டலக்குடா - ரசாக்கிய்யா

குறிஞ்சிப்பிட்டி வடக்கு - டயனா சுரங்கி



கண்டகுளிகுடா - ரெனுகா புஸ்பலதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பள்ளியாவத்தை பிரிவின் சமுர்த்தி சங்கம் தொடர்ந்து ஒரு வருட காலமாக மகா சபை கூட்டத்திற்கு சமுகமளிக்காமையின் காரணமாக உறுப்பினர் தெரிவு இடம்பெற வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவு நுகர்வோர் விற்பனை நிலையம் அக்கறைபற்றில் திறப்பு

(அஸ்லம்)

ஆலையடிவேம்பு மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கத்தின் கூட்டுறவு நுகர்வோர் விற்பனை நிலையம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அக்கரைப்பற்று சாகம வீதியில் கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான பொ. தனேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

அத்துடன் முன்னாள் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.வேல்வேந்தன், தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சி.ஜலால்டீன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் அங்கத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் முதன்முறையாக நுகர்ச்சிப் பிரிவை ஆரம்பித்திருப்பது விசேட அம்சமாகும்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2025இல் வெளியிடப்பெற்றது